# மாவட்ட ஆட்சியர் கடிதம்

அன்புள்ள சகோதர சகோதரிகளே,

நம் மாவட்டத்தில் தொழுநோயினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை தொடர் சிகிச்சையின் பலனாக கட்டுப்பாட்டில் உள்ளது.

தொழுநோய் லெப்ரா பாக்டிரியா என்ற கிருமியினால் உருவாகிறது. இது தொற்றுநோய் அல்ல.

இலவசமான சிகிச்சை அனைத்து மருத்துவமனைகளிலும் கிடைக்கிறது.

ஆரம்ப நிலையிலேயே தொழுநோயை கண்டுபிடித்தால் ஆறு அல்லது பன்னிரெண்டு மாதங்கள் (6/12) தொடர் சிகிச்சை அளித்து, பூரணமாக குணப்படுத்தி வாழவைக்கலாம்.

**தொழுநோயின் அறிகுறிகள்:**

1) சிவந்த அல்லது வெளிறிய உணர்ச்சியற்ற தேமல்

2) கை, கால்களில் சதை குறைந்து வறண்ட உணர்ச்சியற்ற நிலை

3) எண்ணெய் தடவியது போன்ற தோல், கண் புருவம் மற்றும் இமைகளில் முடியில்லாது இருத்தல், காது மடல்களில் சிறு முடிச்சி போன்ற கட்டிகள் இருத்தல்.

கூட்டு மருந்து சிகிச்சை வழங்குவதன் முலம் தொழுநோயினை முற்றிலும் குணப்படுத்த முடியும். தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களை உதாசீனப்படுத்தாமல் அரவணைத்து மற்றவர்களைப் போல் இயல்பாய் வாழ உதவுவோம்.

நம் மாவட்டத்தில் இந்த வருடத்தில் 68 புதிய தொழுநோயாளிகளை கண்டறிந்து கூட்டு மருந்து சிகிச்சை அளித்துள்ளோம்.

எனவே அனைவரும் 30.01.2020 தொழுநோய் ஒழிப்புதின நிகழ்ச்சிக்கு ஒத்துழைப்பு கொடுத்து, மேற்கண்ட அறிகுறிகள் உள்ளவர்களை, பொது சுகாதார ஊழியர்களுக்கு தெரியபடுத்தி தொடர் கூட்டுமருந்து சிகிச்சை வழங்கி, தொழுநோயற்ற சமுதாயம் உருவாக்குவோம்.

மாவட்ட ஆட்சியர் 9/1/2020
திருப்பத்தூர் மாவட்டம்.